**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.354/2021</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி., பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பில் இரண்டாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.V.மகேஸ்வரி, இருக்கை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாமிநாதன் | தந்தை பெயர் | : | சாமிகண்ணு |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 02.06.2026

**P.W. : 2**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பள்ளிப்படிப்பு அதிகம் படிக்கவில்லை. நான் விவசாயம் மற்றும் லோடுமேன் வேலை பார்க்கிறேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் எங்கு வைத்து யார் முன்னிலையில் தயாரிக்கப்பட்டது என்றால் மணப்பாறையில் உள்ள பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஒரு சென்ட் ரூ.1,22,000/– என விலை குறிப்பிடப்பட்டிருந்தது. மொத்த விலை

எவ்வளவு என குறிப்பிடப்பட்டது என்றால் அது தெரியாது. மொத்த நிலம் 26 செண்ட் ஆகும். வா.சா.ஆ.1ல் மூன்று மாத கால அளவு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பின்புறம் உள்ள வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்ட பக்கத்தில் எனது கையொப்பம் உள்ளது. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி மீண்டும் கூறுகிறார் ஒரு லட்சம் என்று எழுதப்பட்டது. வழக்கின் பிரதிவாதி, வாதி மீது மணப்பாறை காவல் நிலைத்தில் புகார் கொடுத்த விவரம் தெரியும். அந்த புகாரில் என்ன விசாரணை நடந்தது என்று தெரியும். மேற்படி புகாரின் காவல்நிலையத்தில் விசாரணை நடந்தபோது எனது முன்னிலையிலும், ஜேம்ஸ் மற்றும் ஜோன்ஸ் ஆகியோர் முன்னிலையிலும் பிரதிவாதி, வாதிக்கு ரூ.4,00,000/- பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அந்த பணத்தை வாதி வாங்கி கொண்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு பணம் வாங்கியதால் தான் பிரதிவாதி புகாரை வாபஸ் வாங்கினார் என்றால் சரியல்ல. மேற்படி தேதியில் பணம் வாதிக்கு பிரதிவாதி கொடுத்தார் என்றும், அதன் பிறகு வா.சா.ஆ.1 ஆவணத்தை எங்கள் முன்னிலையில் பிரதிவாதி வாதியிடம் திரும்ப கேட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. வாதி, அந்த ஆவணம் வீட்டில் இருப்பதாகவும், பிறகு தருவதாகவும் சொன்னார் என்றால் சரியல்ல. வாதி, பணத்தையும் திரும்ப வாங்கிகொண்டு பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கும் நோக்கில் பொய் வழக்கு போட்டார் என்றால் சரியல்ல. அதற்கு உதவியாக நானும் செயல்படுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வாதி மற்றும் பிரதிவாதி இருவரும் தெரிந்தவர்கள். வாதியிடம் வாங்கிய பணத்தை பிரதிவாதி மொத்தமாக திரும்ப கொடுத்துவிட்டார் என்றும், வாதி

எனது நண்பர் என்பதால் அதை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் எனது முன்பாக தயாரிக்கப்படவில்லை என்றும், அதில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.